RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2173

OPEN ACCESS

# பாரதியார் கவிதைகளில் பெருமிதம் என்னும் சொல்

**செ. பவித்ரா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி-642001, தமிழ்நாடு, இந்தியா.

# The Word 'Pride' in Bharatiyar's Poetry

**S. Pavithra** [a, *]

[a] Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi-642001, Tamil Nadu, India

* Corresponding Author: pavithramsp123@gmail.com

Received: 28-08-2022
Revised: 05-10-2022
Accepted: 08-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Bharatiyar has recorded the glories of the Tamil language and its merits in his poems. Through his poems we come to know that how clearly, he has used a single word in many ways. Bharatiyar is proficient not only in Tamil but also well familiar in idioms of English and Sanskrit. He is a multilingual scholar and has created many literary books in these languages. Thus, the word 'Pride' in the poems of Bharathiyar, is used in many ways with different meanings. The word 'pride' is compared with the same word which was used by Tholkappiyar in his text Tolkapiyam. The purpose of this article is to take the word 'Pride' mentioned in Tolkappiyam and examine the different types of meanings that the word conveys in Bharatiyar's poetry.

**Keywords:** Bharatiyar, Pride, Poetry, Idioms

## முன்னுரை

பாரதியார் தமிழ் மொழியின் பெருமைகளையும் அவற்றின் சிறப்புகளையும் குறித்து தனது கவிதைகளில் பதிவு செய்துள்ளார். அக்கவிதையில் ஒவ்வொரு சொல்லையும் பலநயங்களாக கையாண்டிருப்பதை அவரது கவிதைகளின் வழி நாம் காணமுடிகிறது. பாரதியார் தமிழ்மொழி மட்டுமின்றி ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற பழமொழிகளில் புலமை பெற்று விளங்கினார். அம்மொழிகளின் பல இலக்கிய நூல்களை படைத்திருப்பதை அவரது படைப்பு கொண்டு நம் கண்கூடாகக் காணலாம். இப்படி பன்மொழி புலமை வாய்ந் தபாரதியாரின் கவிதைகளில் வரும் பெருமிதம் என்னும் சொல்லாடல் ஒருசொல்லாயினும் பலபொருள்களில் அந்தந்த இடத்திற்கு ஏற்றார்போல் பொருள் தருகிறது. இந்த பெருமிதம் என்னும் சொல்லை தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள பெருமிதம் என்னும் மெய்ப்பாட்டுச்சுவையை பாரதியாரின் கவிதைகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்படுகிறது.

## தொல்காப்பியம்

தொல்காப்பியம் என்னும் நூலின் ஆசிரியர் தொல்காப்பியர். அகத்தியர் எழுதிய அகத்தியத்திற்கு அடுத்து தோன்றிய முழுமுதல் இலக்கணநூல் தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களை கொண்டுள்ளது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்பனவாகும். இதில் எழுத்ததிகாரம் ஒன்பது இயல்களையும், சொல்லதிகாரம் ஒன்பது இயல்களையும், பொருளதிகாரம் ஒன்பது இயல்களையும் கொண்டுள்ளன. இந்நூலுக்கு இளம்பூரணர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடர், நச்சினார்க்கினியார், சேனாவரையர் போன்ற பல உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளனர்.

இதில் இளம்பூரணர் உரை தொல்காப்பியம் முழுமைக்கும் கிடைக்கிறது. ஆனால் பேராசிரியர் உரை மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் என்ற நான்குக்கு மட்டுமே கிடைக்கிறது. இக்கட்டுரையில் பேராசிரியர் மற்றும் இளம்பூரணர் உரைகளைக் கொண்டு ஆராயப்படுகிறது.

## பாரதியார்கவிதைகள் தொகுதி -1 மற்றும்தொகுதி- 2

பாரதியார் பெண்கல்வி, தேசபக்தி, கண்ணன்பாட்டு, பாஞ்சாலிசபதம், குயில்பாட்டு போன்ற பலசிறு காப்பியங்களை இயற்றியுள்ளார். இந்த பாரதியாரை பற்றி பலஆசிரியர்கள் பலநூல்களை எழுதியுள்ளனர். இதில் பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும் என்ற நூலை உஷாநந்தினி என்பவர் எழுதியுள்ளார். இந்நூலையே நாம் ஆய்விற்கு எடுத்துக் கொண்டுள்ளோம். இந்தநூல் தொகுதி -1 மற்றும் தொகுதி -2 என்ற இருநூல்களை கொண்டுள்ளது. முதல்தொகுதி - தேசிய கீதங்கள், தேசபக்திபாடல்கள், தேசிய இயக்கப் பாடல்கள், தேசிய தலைவர்கள், பிறநாடுகள், தோத்திரப் பாடல்கள், ஞான பாடல்கள், பல்வகை பாடல்கள், சான்றோர்கள் என பல பாடல்களை உள்ளடக்கிய தொகுதியாகும். இரண்டாவது தொகுதியில் - கண்ணன் பாட்டு, பாஞ்சாலிசபதம், குயில்பாட்டு, புதிய பாடல்கள் என குறுங்காப்பியங்களை உள்ளடக்கிய தொகுப்பாகும்.

தொல்காப்பியத்தில் பெருமிதம் பழம்பெரும் இலக்கண நூலாக கருதப்படும் தொல்காப்பியத்தில் வரும் மூன்று அதிகாரத்தில் ஒரு அதிகாரம் பொருள் அதிகாரமாகும். இப்பொருளதிகாரத்தில் வரும் ஒன்பது இயல்களில் ஆறாவது இயலாக வருவது இந்த மெய்ப்பாட்டியல் ஆகும். தொல்காப்பியர் கூறியுள்ள எண்வகை மெய்ப்பாடுகளாவன,

"நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகை

என்று அப்பால் எட்டே மெய்ப் பாடென்ப"

என்ற வரிகளில் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று எட்டு வகைப்படுகிறது. இந்த எட்டு மெய்ப்பாடுகளும் 32 நிலைகளாக பிரிகின்றன. அதில் ஒன்றாக வரும் பெருமிதம் என்னும் மெய்ப்பாட்டை பற்றி காண்போம். பெருமிதம் என்பது வீரம் என்னும் பொருளின் தொல்காப்பியத்தின் கூறப்பட்டுள்ளது (Vellavaranaan, 1983). இந்த பெருமிதம் நான்கு நிலைகளில் தோன்றுவதாக தொல்காப்பியர் கூறுகிறார். அதாவது,

"கல்வி தருகண் இசைமை கொடையெனச்

சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"

என்ற வரிகளில் கல்வி, தறுகண், இசைமை, கொடை என்ற நான்கு நிலைகளில் பெருமிதம் மெய்ப்பாடு தோன்றுவதாக கூறுகிறார் தொல்காப்பியர் (Vellavaranaan, 1983).

## கல்வி

கல்வி ஒரு குழந்தையை அறிவுடனும், நல்லொழுக்கத்துடனும் வளர்க்க உதவும் ஒரு கருவியாகும். கல்வியின் மூலம் குழந்தைகள் நல்ல முறையில் வழிநடத்தப்படுகின்றன. சமுதாயத்திற்கு தனது பங்களிப்பை தருவதையும் அறிய முடிகிறது. கல்வியை தெரிந்த ஒருவராலே இந்த சமுதாயத்தை வழி நடத்த முடியும் என்பது நாம் பழந் தமிழர்களின் இலக்கண இலக்கிய நூல்களின் மூலம் அறியலாம். இந்த கல்வியை பற்றி பாரதியார் தமது கவிதைகளில்,

"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம்

செய்வோம் ஆலைகள் வைப்போம்

கல்விச் சாலைகள் வைப்போம்"

என்ற வரிகளில் நமது நாட்டிற்கு தேவையான ஓர் கருவிகளை தயாரிப்போம். எழுதுவதற்கு நல்ல தரமான காகிதங்களைசெய்வோம். நம்மக்கள் பணிபுரிவதற்கு நல்ல தொழிற்சாலைகளை அமைப்போம். அவற்றுடன் அவர்கள் தன் வாழ்வில் மேம்பட்டு சிறந்து விளங்குவதற்கும் கல்வி கற்பதற்கும் கல்வி சாலைகளை வைப்போம் என்று பாரதியார் கல்விக்கு பெரும் முக்கியத்துவம் அளிப்பதை காணலாம் (Usharani, 2019).

"கல்வி சிறந்த தமிழ்நாடு -புகழ்க்

கம்பன் பிறந்த தமிழ்நாடு"

என்ற வரிகளில் கல்வியில் சிறந்தது நமது தமிழ்நாடு என பெருமிதம் கொள்ளும்படி தமது கவிதை நூலில் பாரதியார் கூறுவதை காணலாம் அதாவது இங்கு பெருமிதம் என்னும் சொல் கல்வியினால் பெருமிதம் அடையும்படி கூறப்பட்டுள்ளது (Viswanathan, 2004). சான்றாக நமது சங்க இலக்கிய நூல்களிலே கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை,

"வல்லார் முன்சொல் வல்லேன் என்னைப்

பிறர்முன்னர்க்கல்லாமை

காட்டியவள்வாழி, சான்றீர்"

நாவன்மை கொண்டவர் முன்னிலையில் சொல்லாடி வெல்பவன் நான் அப்படிப்பட்ட என்னை பலர் முன்னிலையில் கல்லாதவன் என்று காட்டுகிறார். எண்ணிப்பாருங்கள் என்று கல்வியைப் பற்றி கலித் தொகையில் கூறி இருப்பதை காணலாம் (Viswanathan, 2004).

"பிறங்கிலை இனியுள பாலென

ஈன்றதாயோ வேண்டாள் அல்லள்

கல்வியென் என்னும் வல்லான்

சிறாஅன் ஒள்வேல் நல்லன் "

என்ற பாடலில் கல்வி அறிவு உடையவன் என்று கூறியுள்ள வரிகளில் புறநானூறு கல்வியை பற்றி கூறுவதை காணலாம். இது போல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று நாலடியார். இந்நூல் சமண முனிவர்களால் இயற்றப்பட்டு மக்களுக்கு நீதி புகட்டும் அடிப்படையில் நானூறு பாடல்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட நாலடியாரில் கல்விக்கென ஒரு அதிகாரத்தை யேபடைத்திருப்பதிலிருந்து கல்விக்கு அக்காலத்தில் முக்கியத்துவம் அளித்துள்ளதை நாம் காணமுடிகிறது (Viswanathan, 2017).

"இம்மைபயக்குமால் ஈயக்குறை வின்றால்

தம்மைவிளக்கு மால்தாமுளராக் கேடின்றால்

எம்மையுலகத்தும் யாம்காணோம் கல்விபோல்

அறுக்கும் மருந்து."

என்ற வரியில் கல்வி இவ்வுலக இன்பத்தை தந்து பிறர்க்கும் தருவதால் எப்பொழுதும் குறையாது பெருகும் (Viswanathan, 2017). கற்றவர் புகழை எங்கும் பரவச் செய்யும். தாம் உயிரோடு இருக்கும் வரை அழியாது ஆதலால் எந்த உலகத்திலும் கல்வியைப் போல அறியாமையை போக்கும் மருந்துயாம் கண்டதில்லை என்று கல்வி என்பது அறியாமை என்னும் இருளைப் போக்கும் ஒரு மாமருந்து என்கிறது நாலடியார்.

இதேபோல் கல்வி என்பது எவராலும் எக்காலத்திலும் அழிவில்லாத ஒரு பெருஞ்செல்வம் என்று திருக்குறள் கூறுகிறது. நாலடியாரை போலவே திருக்குறளும் கல்வி என்று ஒரு அதிகாரமே படைத்திருக்கிறது. அதை

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக"

கற்கத் தகும் நூல்களை முதலில் பிழை இல்லாமல் கற்க வேண்டும். பிறகு கற்ற கல்விக்கு ஏற்றார் போல நல்ல வழிகளில் நடக்க வேண்டும் என்று இந்த இடத்தில் கல்வி கற்க வேண்டும் என்றும் அதன்படி நடக்க வேண்டும் என்றும் வள்ளுவர் உரைப்பதைக் காணலாம் (Parimelzhagar, 2005).

## தறுகண்

தறுகண் என்பது அஞ்சத்தக்கது கண்ட இடத்தில் அஞ்சாமை என்று தொல்காப்பிய உரையில் பேராசிரியர் என்னும் உரையாசிரியர் கூறுகிறார். அஞ்சாமை உடைய வீரம் என்று பொருள் கொள்ளலாம் இந்த தறுகண்ணைப் பற்றி பாரதியார்,

"கீழோர்க்கு அஞ்சேல்"

என்ற வரியில் கீழ் மக்களை கண்டு பயப்படாதே என்று பாரதியார் கூறுகிறார் (Usharani, 2019). இதேபோல்,

"சாவதற்கு அஞ்சேல்"

இறப்பதை எண்ணி அனைவரும் பயம் கொள்வர் ஆனால் அதை நினைத்துக் கூட அஞ்ச வேண்டாம் என்று பாரதியார் கூறுவதை காணலாம். சாவு என்பது இயற்கையான நிகழ்வு அதைக் கண்டு நம்மக்கள் முதல் உயிரினங்கள் வரை அனைவரும் அஞ்சி வாழ்வதை எதிர்த்து பாரதியார் இவ்வாறு கூறுகிறார் (Usharani, 2019).

பேய்களுக்கு அஞ்சேல்" பேய் என்றாலே அனைவரின் உடலும் நடுங்கும் பேயை கண்டு அஞ்சாதவர் இல்லை என்று கூட கூறலாம். அப்படிப்பட்ட பேயைக் கண்டு அஞ்சத் தேவையில்லை என்கிறார் பாரதியார்.

பாரதியார் கவிதைகள் மட்டும் இன்றி சங்க இலக்கியங்கள் பலவும் அஞ்சாமை என்னும் பெருமிதச் சொல்லாடலை பற்றி கூறுகிறது (Usharani, 2019).

"அடன் மாமேல் ஆற்றுவேன் என்னை

மடன் மாமேன மன்றம் படர்வித்தவள்"

என்ற பாடலில் போரில் எதிர்த்து வரும் குதிரையை என்னால் தடுக்க முடியும். ஆனால் இவளோ என்னை பனைமடல் குதிரை மேல் ஏறவைத்து விட்டால் என்று குதிரையை தடுக்கும் வீரனை கூறுகிறது கலித்தொகை. பொதுவாக போர்க்களம் என்றாலே அனைவருக்கும் சிறிது பயமேனும் காணப்படும். ஆனால் சங்ககால மக்கள் போர் தொடுக்க பயப்படாமல் இருப்பதை இங்கு நாம் காணலாம் (Viswanathan, 2004).

இதே போல் புறநானூற்றில்

"ஊர்பெரிது இகந்தன்றும் இலனே அரண்என

காடுகை கொண்டன்றும் இலனே"

செருப்பில் உருத்தும் கல் போன்றவன் தலைவன். நடப்பவர்கள் அந்த கல்லை மிதித்துக் கொண்டு நடக்க முடியாது (Viswanathan, 2017). காலில் அந்த கல்குத்தும் அதுபோல எதிராளிகளால் இவனை மிதிக்க முடியாது என்று தலைவனின் வீரத்தைப் பற்றி புறநானூறு கூறுகிறது. இதேபோல் குறளில் வள்ளுவர்,

"பேராண்மை என்பதறு கண் ஒன்றுற் றக்கால்

ஊராண்மை மற்றதன் எஃகு"

பகைவரை திர்த்து நிற்க்கும் வீரத்தை மிக்க ஆண்மை என்று கூறுவர். ஒரு துன்பம் வந்தபோது பகைவர்க்கும் உதவிச் செய்வதே அந்த ஆண்மையின் சிறந்ததன்மை என்று கூறுவர் (Parimelzhagar, 2005).

"தெற்றப் பகைவர் இடர்ப்பாடு கண்டக்கால்

மற்றும் கண்ணோடுவர் மேன்மக்கள் - தெற்ற

நவைக்கப்படும் தன்மைத் தாயினும் சான்றோர்

அவைப்படின் சாவாது பாம்பு"

தெளிவாகத் தெரியும் பகைவர் என்றாலும் அவர் துன்பப்படுவதைக் கண்டால் மேன் மக்கள் அப்போதும் இரக்கம் காட்டுவர். பாம்பு கொல்லப்பட வேண்டிய தன்மை உடையது என்பது தெளிவாகத் தெரிந்தாலும் சான்றாண்மை மிக்கோர் கூடியிருக்கும் அவைக்கு நடுவில் தோன்று மானால் பாம்பைக் கொல்ல மாட்டார்கள். பாம்பு சாகாமல் ஓடவிட்டு விடுவார்கள். இங்கு வீரனின் தன்மையை கூறுகிறார் ஆசிரியர் (Usharani, 2019).

## புகழ்மை

புகழ்மை என்பது இங்குபுகழை குறிக்கிறது. இந்தபுகழை இசைமை என்றும் குறிப்பிடலாம். இந்த இசைமை என்பது இன்பமும் பொருளும் கிடைப்பதற்காக பழியோடு வரும் செயல்களை செய்யாமல் இருப்பது என்கின்றார் பேராசிரியர். இவர் புகழ்மையை இசையமை எனக் கொள்கிறார்.

இந்தப் புகழ்மையை பற்றி பாரதியார் தனது பாஞ்சாலி சபதம் என்னும் குறுங்காவியத்தில்,

"இன்தமிழ் நூலிது தான்- புகழ்

ஏய்ந்தினி தாயென்றும் இலகிடவே"

என்ற வரியில் இனிய தமிழ் நூலானது புகழ்படைத்த சுவை பெற்று எந்நாளும் நிலை பெற்று நிற்கவும் என்று பாஞ்சாலி சபதம் என்னும் நூலில் தமிழ் மொழி புகழ் என்னும் சுவை பெற்று விளங்குகிறது என்று தமிழில் புகழை எடுத்துரைக்கிறார் (Usharani, 2019).

"வீரர் வாழ்த்த மியேச்சர் தந்தீயகோல்

வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்"

என்ற இடத்தில் வீரர்கள் எல்லோரும் வாழ்த்துமாறு அந்நியரின் அரசாட்சியை அடியோடு அழித்து வெற்றி பெற்றவர் வீரசிவாஜி, என்று சிவாஜியின் புகழை பாரதியார் தனது நூலில் எடுத்துரைக்கிறார் (Usharani, 2019). இதுபோலவே பாஞ்சாலி சபதத்தில்,

"நன்னலங்கொண்டகுடிப்படை-இந்த

நானிலமெங்கும் பெரும் புகழ் மிஞ்சி"

என்ற வரியில் உலகம் முழுவதும் நான்கு பக்கங்களிலும் பெரிய புகழை உடைய சகோதரர்களான பாண்டவர்கள் என பாண்டவர்களின் பெருமையையும், புகழையும் பாரதியார் இங்கு கூறுகிறார் (Usharani, 2019).

இதேபோல்அகநானூற்றில்,

"கழியா காதல ராயினுஞ

சான்றோர் பழியொடு வருஉம்

இன்பம் வெஃகார்"

என்ற பாடலில் எவ்வளவு தான் காதல் கொண்டவராக இருந்தாலும் சான்றோர் வழியோடு வரும் புகழை அதாவது இன்பத்தை விரும்புவதில்லை. நீயோவானளவும் புகழ் கொண்டவன் என தலைவனின் புகழை அகநானூறு சுட்டுகிறது (Jeyabal, 2017).

"வையம் புரவு ஊக்கும் உள்ளத்தேன்

என்னை இரவு ஊக்கும்"

என்ற வரியில் தலைவன் தன் தோழனிடம் கூறுகிறான் நானோ உலகை காப்பாற்ற வேண்டும் என்னும் உள்ளம்கொண்டவன் அப்படிப்பட்ட என்னை அவளுக்காக பிச்சை எடுக்க வைத்து விட்டாள் என்பதில் உலகை காப்பாற்றவேண்டும் என்ற இடத்தில் தலைவனின் புகழ் கூறப்படுகிறது (Viswanathan, 2004).

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு"

தனது அன்பை பலருக்கும் கொடுத்து புகழோடு வாழ வேண்டும் அப்படிப்பட்ட வாழ்வு அல்லாமல் உயிருக்கும் ஊதியம் என்பது வேறு எதுவும் இல்லை என்று புகழோடு வாழ்வதை பற்றி வள்ளுவர் விளக்கி உரைக்க காண்கிறோம். இவ்வாறு புகழ் என்னும் பெருமிதச் சொல்லாடல் பெறும் விதத்தை பற்றி நம்மால் காண முடிகிறது (Parimelzhagar, 2005).

## கொடை

கொடை என்பது பிறருக்கு கொடுப்பது என்றும் பொருள் கொள்ளலாம். அதை பேராசிரியர் கொடை என்பது உயிரும், உடம்பும், உறுப்பு முதலிய எல்லா பொருளையும் கொடுத்தல் என்கின்றார். அதாவது தன்னிடம் உள்ள அனைத்தையும் பிறருக்கு வேண்டியவாறு கொடுப்பது என அறிய முடிகிறது. இந்தகொடையை இன்று மட்டுமல்லாமல் சங்ககாலம் தொட்டு பல்வேறு இலக்கியங்களில் நாம் காண முடிகிறது. குறிப்பாக சங்க இலக்கியத்தில் பாரி, ஓரி, பேகன், அதியமான் போன்ற பல்வேறு கொடை வள்ளல்களை பற்றி நாம் கண் கூட நமது இலக்கியங்களின் வழி காணலாம் இப்படிப்பட்ட கொடை உணர்வை பாரதியார் தனது புதிய ஆத்திச்சூடியில்,

"ஈகைதிறன்" பிறருக்கு கொடுக்க வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும் என்கின்றார் பாரதியார் (Usharani, 2019). இதேபோல்,

"திருவினை வென்றுவாழ்" (Viswanathan, 2017) எந்த பலனையும் எதிர்பார்க்காமல் பிறருக்கு உதவி செய்து அதனால் வரும் பலனை பெற்று வாழ்க எனக் கொடைச் சிறப்பை பற்றி காண்கிறோம். இதேபோல்

"கானத்துப் பொய்கையிலே தனிக்

கமலமென் பூமிசை வீற்றிருப்பாள்

தானத்து ஸ்ரீதேவி அவள்" (Viswanathan, 2017)

என்ற வரிகளில் சோலையில் உள்ள தடாகத்தில் ஒப்பற்ற தாமரை மலரில் அமர்ந்திருக்கும் பெருங்கொடை பண்புடைய திருமகள் என்று ஸ்ரீதேவியின் கொடைப் பண்பை பாஞ்சாலி இவ்விடத்து விளக்குகிறாள்.

"கடும்பின் அடுகலம் நிறையாக நெடுங்கொடிப் பூவா

வஞ்சியும் தருகுவன் ஒன்றோ? வண்ணம்

நீவிய வணங்கு இறைப்பனைத்தோள்" (Viswanathan, 2017)

என்ற வரியில் நலங்கிள்ளி தன் குடும்பத்தார் சமைப்பதற்காக வஞ்சி நகரத்தையே தருவான். அவனைப்பாடும் விறலியர் தலையில் பூவைப்பதற்கு விலை பொருளாக மதுரை நகரையே தருவான்என நலங்கிள்ளியின் கொடைச் சிறப்பு இங்கு கூறப்பட்டுள்ளது.

"நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்

இல்லெனினும் ஈதலே நன்று" (Parimelzhagar, 2005)

பிறரிடம் பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்லநெறி என்றாலும் கொள்ளல் தீமையானது, மேலுலகம் இல்லை என்றாலும் பிறக்குக் கொடுப்பதே சிறந்தது. என்று கொடைச் சிறப்பை வள்ளுவர் தனது குறள் வழி கூறுவதைக் காணலாம்.

"பாரிபாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப்பதுவே" (Viswanathan, 2017)

என்ற புறநானூற்றுப் பாடலில் வள்ளல் தன்மையில் சிறந்தவனாக பாரியையே சான்றோர் பெருமக்கள் கூறுவர். அப்படிப்பட்ட வள்ளல் தன்மை நிறைந்த இவ்வுலகில் கொடுப்பதற்கு பாரிமட்டுமல்ல மழையும் இங்கு உள்ளது. என்று பாரிக்கும் மழைக்கும் உள்ளகொடை தன்மையைப் பற்றி கூறப்பட்டுள்ளது. இங்கு பெருமிதம் என்னும் சொல்லாடல் பொருளில் வந்தமை பற்றி பல இலக்கியங்களில் சான்றுகளுடன் பாரதியார் கவிதையும் ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளது.

## முடிவுரை

பெருமிதம் என்னும் சொல் பலபொருளில் வருவதை நாம் சொல்லாடல் என்கின்றோம். அச்சொல்லாடலை தொல்காப்பியத்தில் வரும் பெருமிதம் என்னும் மெய்ப்பாட்டில் கூறப்பட்டுள்ள பொருளை எடுத்துக் கொண்டு பாரதியார் கவிதைகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பெருமிதம் என்னும் மெய்ப்பாட்டில் வீரத்தால் வரும் கல்வி தறுகண், கொடை, இசைமை அல்லது புகழ்மையை பற்றி பாரதியார் எவ்வாறு தனது நூலில் இவற்றை எடுத்தாண்டுள்ளார் என்றும் அத்துடன் அவற்றிற்கான சான்றுகளை கொண்டு கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. கல்வி என்பது ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் சரிநிகராக கல்வியை வழங்க வேண்டும் என்றும், இன்று மட்டுமல்லாமல் சங்ககாலம் தொட்டு கூறப்பட்டுள்ளதை நாம் காணலாம். வீரத்தினால்புகழின்உச்சியில் விளங்கியவர்கள் நம் தமிழர்கள் என்பதை கூறப்பட்டுள்ளதை சான்றுகளின் வழி அறிய முடிகிறது. சங்க கால மக்கள் வீரத்துடன் போரிட்டு பலநாடுகளை வெற்றி கொண்டு புகழடைந்து இருக்கின்றனர் என்பதை நாம் காணலாம். பிறருக்கு நம் மனம் உகந்து கொடுக்கும் தன்மையை கொடை என்கிறோம். இந்தகொடை சிறப்பு என்பது நம் முன்னோர்களிடமிருந்து இன்று வரை நம்மால் பின்பற்றப்படும் ஒரு முறையே என்று கூறலாம். பணம் மட்டுமின்றி உடல் உறுப்புக்கள் உயிர் என அனைத்தையும் கொடுக்கத் துணிபவர்களைநாம் இன்று வரை காணமுடிகிறது. எனவே கொடைஎன்பது நமது ரத்தத்தில் ஊறிய ஒருஉறவை போன்றது. வீரம் எவ்வாறு நமது உள்ளத்தில் காணப்படுகிறதோ அதுபோலவே கொடையும் காணப்படுவதைக் காணலாம்.

## References

Jeyabal, R. (2017) Agananooru (Mulamun Uraium), New Century Book House, Chennai, India.

Parimelzhagar, (2005) Thirukkural, Paari Nilaiyam, Chennai, India.

Usharani, S. (2019) Bharathiyar Kavithaikal, Varthamaan Pathippagam, Chennai, India.

Vellavaranaan, K. (1983) Tholkappiyam, Madurai Kamarasar University, Madurai, India.

Viswanathan, A. (2004) Kalithogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

Viswanathan, A. (2017) Purananuru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License